**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண். 190/2020

நாள்: 03.10.2024

பெயர்: தட்சிணாமூர்த்தி (பி.வா.சா.2) த/பெ: துரைசாமி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

<u>**வாதி தரப்பு குறுக்கு விசாரணை...**</u>

1) நான் கடந்த 5 ஆண்டுகளாக இருகையூர் ஊராட்சி மன்ற தலைவராக உள்ளேன். வாதி குடியிருக்கும் வீட்டின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண்.116/6. வாதிகள் பொது பாதையை ஆக்கிரமித்துள்ளதாக எங்கள் அலுவலகத்தில் யாராவது புகார் கொடுத்துள்ளார்களா என்றால் ராமச்சந்திரன் புகார் கொடுத்துள்ளார். எத்தனை முறை புகார் கொடுத்துள்ளார் என்றால் ஒரு முறை புகார் கொடுத்துள்ளார். அந்த புகாரின் மீது பஞ்சாயத்தில் தீர்மானம் போட்டுள்ளோமா என்றால் தீர்மானம் போடவில்லை. வாதிகள் குடும்பம் தாவா சொத்தில் எவ்வளவு காலம் குடியிருந்து வருகிறார்கள் என்றால் 3 தலைமுறையாக குடியிருந்து வருகிறார்கள்.

நீதிமன்ற கேள்வி

தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால் தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது அது பாதையாகும்.

2) சர்வே எண்.11/15 மற்றும் சர்வே எண்.116/6 இரண்டையும் சேர்த்து வாதிகள் மேல்புறமும், தென்புறமும் வேலி வைத்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். சர்வே எண்.11/15 தென்புறம் படலுக்கு முன் பகுதியில் வாதிகள் குப்பை குழிப் போட்டு, ஆடு மாடுகள் கட்டி, வைக்கோல்போர் போட்டு அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் இல்லை. குப்பைக் குழி, கொட்டகை இல்லை அனைத்தும் ரோட்டிற்கு வடபுறத்தில் தான் உள்ளது. ஆடுமாடுகள் தான் கட்டியுள்ளனர். மேற்கண்ட வேலிக்கு தென்புறம் யார் உள்ளார்கள் என்றால் புளியமரம் உள்ளது. வாதிகள் குடியிருக்கும் வீட்டிற்கு மேற்கில் ராமச்சந்திரன் குடியிருக்கிறார் என்றால் சரிதான்.

3) தனவேல், இளமுருகு வீட்டிற்கு மேல்புறம் பாதை உள்ளதா என்றால் பாதை உள்ளது அது வாதிகள் போட்ட பாதை இல்லை. மேற்கண்ட பாதையை யார் போட்டது என்றால் ராமச்சந்திரனின் 4வது தாத்தா ரகுபதி அவர் போட்ட பாதையாகும். ரகுபதியின் உடன்பிறந்தவர்கள் யார் என்றால், 1) சின்னதம்பி, 2) துரைக்கண்ணு, 3) ஆட்டுக்காரர், 4) பூராசாமி ஆவார்கள்.

**( வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)**

ஒப்பம்/−திரு.S.கணேஷ்,M.Com., M.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி(மு.கூ.பொ)
ஜெயங்கொண்டம்.